**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 29 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 30 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக்கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரித்தற்ற நான்கு வாகனங்களின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 3,082,000 நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டுள்ளமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபைக்குரித்தான 03 வாகனங்களின் பெறுமதி கடந்த 02 தொடக்கம் 15 ஆண்டுகளாக மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப் பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 576,000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட காணியின் பெறுமதி நிதிக்கூற்றுக்குக் கொண்டுவரப்பட்டிராமையினால் ஆதனங்களின் பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் கிராமப்புறத்திலுள்ள 1000 கிலோ மீற்றர் வீதிகளை புனரமைக்கும் வேலைத்திட்டத்தின் பிரகாரம் ரூபா 6 மில்லியன் பெறுமதியான மழவராயர் வீதி புனரமைப்பு வேலைகள் 22 நவம்பர் 2017 அன்று நிறைவேற்றப்பட்டிருந்த போதும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து ரூபா 2,162,052 நாளதுவரை பெறப்பட்டிருக்காமையினால் ஒப்பந்தகாரருக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

சில்லறைக் கடன் கொடுத்தோர் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 142,600 வழங்குனருக்கு நாளதுவரை செலுத்தப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 158(1) | 2,301,213 | ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு சபையின் செயலாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் நிதி ஒழுங்கு விதி 571 | 283,625 | மூன்று வகையான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்றுநிருபம் 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | | சபையின் 03 வாகனங்களிற்கு ஒரு வருட காலமாக எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | அரச நிர்வாக சுற்றறிக்கை 26 ஜுன் 2008 இன் 13/2008 ஆம் இலக்கம் | | 09 வாகனங்களின் நாளாந்த வாகன ஓட்ட அட்டவணைகள் தொடர்ந்து வரும் |

| | | |
|---|---|---|
| | | மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PE/01/2017 ஆம் இலக்கம் | ஐந்து உத்தியோகத்தர்களால் பிணைப்பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 48,863,336 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 48,910,945 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 670,400 | - | 141,657 | 2,301,213 | 670,400 | - | 141,113 | 2,188,049 |
| (ii) | வாடகைகள் | 22,765,680 | - | 14,471,906 | | 25,685,900 | - | 17,106,478 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,764,000 | - | 1,630,247 | | 1,457,400 | - | 1,612,200 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 32,871,510 | - | 41,702,858 | 118,882,503 | 33,484,900 | - | 36,646,436 | 85,674,108 |
| | | **58,071,590** | - | **57,946,668** | **121,183,716** | **61,298,600** | - | **55,506,227** | **87,862,157** |

#### 2.2.2 வீதவரிகள்

ஆதனவரி நிலுவைகள் கூட்டுமொத்தம் ரூபா 2,301,213 இனை அறவிடப்பட்டிருக்க கடந்த 01 தொடக்கம் 09 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 1,474,910 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 7,876,038 தொகையான முத்திரைக்கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்படவேண்டியிருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைவதற்கு தவறியமை**

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் மூலம் ரூபா 2,999,724 கிரயத்தில் நிறைவேற்றப்பட்டிருந்த முதலைக்குழி குடிநீர் விநியோகத்திட்டத்தினது குடிநீர் விநியோகச் செயற்பாடுகள் தண்ணீர் உவராகி நிறுத்தப்பட்டுள்ளதால் இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு கடந்த 03 ஆண்டுகளுக்கு மேலாக அடையப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை.

(ii) கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) தேசிய கொள்கைகளின்படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டிருக்காமல் சூழல் பாதிப்படைய கூடியவாறு தீ மூட்டி எரிக்கப்பட்டிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

சபைக்குரித்தான நான்கு நூல்நிலையங்களது 817 நூல்நிலைய அங்கத்துவங்களை புதுப்பித்தல் நடவடிக்கைகளினை வருடாந்தம் மேற்கொள்வதற்கு சபை தவறியிருந்தது.

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 15 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்திருந்தன.

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையானது கடந்த 45 ஆண்டுகளாக ஆதனவரி மீள் மதிப்பீட்டினை மேற்கொள்ளத் தவறியிருந்தது.

(ஆ) சபையில் இரு மயானக் காவலாளிகள் கடமையாற்றுகின்ற போதும் மயான வரி அறவிடப்பட்டிருக்க சபையினால் நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 கையளிக்கப்படாத சொத்துக்கள்**

சபையின் பயன்பாட்டில் உள்ள 06 உழவு இயந்திரங்கள் சபைக்கு உரித்தற்ற நிலையில் கடந்த 07 தொடக்கம் 16 ஆண்டுகளாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்தன.

**3.5.2 விளைவற்ற சொத்துக்கள்**

கட்டைவேலி முன்பள்ளியானது இயங்க வைக்கப்பட்டிருக்கவில்லையாதலால் அங்குள்ள தளபாடங்களும் பராமரிப்பின்றி காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் முன்பள்ளியை இயக்குவதற்கு கடந்த 04 ஆண்டுகளாக சபையால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வின் போது 620 நூலகப் புத்தகங்கள் பௌதீகச் செவ்வை பார்த்தலுக்குக் கிடைத்திருக்காமைக்கான காரணங்கள் கணக்காய்வுக்கு அறியக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 1,961 தொடக்கம் ரூபா 12,345,771 அல்லது 0.1 சதவீதம் தொடக்கம் 20 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 180,855 தொடக்கம் ரூபா 13,074,403 அல்லது 13 சதவீதம் தொடக்கம் 21 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | வியாபார உரிமக் கட்டணங்கள் பதிவேடு, இழப்புப் பதிவேடு, தெரு விளக்கு பதிவேடு, அளவுத்தாள் பதிவேடு, காணி விற்பனை வரிப் பதிவேடு, வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம் என்பன பராமரிக்கத் தவறியமை. |
| (ஆ) | இருப்புக்கள் | பதினொரு வகையான பொருட்களினை பொருள் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யத் தவறியமை. |